அகில இந்திய பல்கலைக்கழக சங்கம் (Association of Indian Universities) நடத்திய தென்மண்டல அளவிலான கலைப் பண்பாட்டுப் போட்டிகள், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் கடந்த 18.12.2019 முதல் 22.12.2019 வரை நடைப்பெற்றன. இதில் பாரதிதாசன் பல்கலைக்கழகம் சார்பில் குறுநாடகம் (SKIT) ஊமைநாடகம் (MIME) நாட்டுப்புற நடனம் (Folk dance) நாட்டுப்புற இசைக்கருவிகளின் சங்கமம் (Folk orchestra ) வண்ணக் காகிதத் துண்டுகளால் கருத்தோவியம் உருவாக்குதல் (Collage) ஆகிய பிரிவுகளில் கலந்து கொண்டனர். இவற்றில் ஒட்டுமொத்த நாடகப் பிரிவிற்கான சாம்பியன் பட்டத்தையும், நாட்டுப்புற நடனப்பிரிவில் இரண்டாம் இடத்தினையும்,மற்ற இரண்டு போட்டிகளில் மூன்றாம் இடத்தினையும் பெற்று அடுத்து **தேசிய அளவில் Noida University யில் நடைபெறும் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.** வெற்றி பெற்ற மாணவர்கள் மாண்பமை துணைவேந்தர் P.மணிசங்கர் அவர்கள், பதிவாளர் G. கோபிநாத் அவர்கள் மற்றும் தேர்வுநெறியாளர் K. துரையரசன் ஆகியோரிடம் வாழ்த்துப் பெற்றனர். கலைப்பண்பாட்டு ஒருங்கிணைப்பாளர் எம்.சுருளிநதி, கௌரவ விரிவுரையாளர், சரவணன், பயிற்சியாளர்கள், வினோத்ராஜ், யூசுப்தீன், மற்றும் சுரேஷ் பீட்டர், ஆகியோர் உடனிருந்தனர்.



Bharathidasan University won championship in the theater event (MIME and Skit), and Folk dance category university hold second place and in the folk orchestra and collage university students won third prize organized by Association of Indian Universities and Alagappa University held on 18th and 22nd December 2019. Honorable Vice-Chancellor Dr.P.Manisankar, Registrar Dr. G. Gopinath and Controller of Examination Dr. K. Duraiarasan, Bharathidasan University, felicitated the team at the V.C.'s Office, in the presence of Dr. M. Surulinathi, Cultural Co-coordinator, Dr. Saravanan Guest Lecturer, School of Performing Arts and Cultural Trainers Mr. Vinothraj, Mr.Yousufdeen and Mr. Suresh Peter.